**சார்பு நீதிமன்றம், அவிநாசி.**

**முன்னிலை : திரு. K. சுரேஷ்குமார், B.A., B.L.,**
**சார்பு நீதிபதி, அவிநாசி.**

2024–ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம், 10–ஆம் நாள் புதன்கிழமை
(திருவள்ளுவராண்டு 2054, சோபகிருது வருடம், பங்குனி மாதம் 28–ஆம் நாள்)

**இந்து திருமண அசல் மனு எண். 115 / 2023**
**(CNR No.TNTI16-000768-2023)**

ஆர்.கிஷோர் குமார் ... மனுதாரர்

/எதிராக/

வி.சித்ரா ... எதிர்மனுதாரர்

இம்மனுவானது கடந்த 02.04.2024 அன்று என் முன்பாக இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.பொன்னுச்சாமி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.ஆறுமுகம் அவர்கள் ஆஜராகியும் இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலித்தும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

கடந்த 04.09.2017–ஆம் தேதியில் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே நடந்த திருமணத்தை இரத்து செய்து விவாகரத்து வழங்கி உத்திரவிடக்கோரி மனுதாரரால் இந்த மனு இந்து திருமணச்சட்டப்பிரிவு 13 (1) (i–a)–ன் கீழ் 31.07.2023–ஆம் தேதியில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) மனுவின் சுருக்கம் :

மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 04.09.2017–ஆம் தேதியன்று இந்துகுல வழக்கப்படி சக்தி விநாயகர் திருக்கோயிலில் வைத்து திருமணம் நடைபெற்றது. மனுதாரருக்கு கீரணத்தைச் சேர்ந்த மருதாச்சலம் என்பவரின் அறிமுகம் ஏற்பட்டது. மருதாச்சலம் எதிர்மனுதாரரின் அத்தை மகள் சகுந்தலா, அக்கா விஜி மற்றும் கிருஸ்துவ பாதிரியார் ஒருவரும் ஆகியோர்களை மனுதாரரின் வீட்டிற்கு அழைத்து வந்து வீட்டை பார்த்து விட்டு திருமணத்தை முடிவு செய்தனர். திருமணத்தின் போது மனுதாரர், எதிர்மனுதாரரின் உறவினர்களிடமிருந்து பணமோ, நகையோ, சீதனமாக வாங்கவில்லை. திருமணத்தின் போது மனுதாரர் எதிர்மனுதாரருக்கு 5 பவுன் தாலிக்கொடி அணிவித்தார். திருமணச் செலவுகளை சுமார் ரூ.6,00,000/–ஐ மனுதாரரின் வீட்டாரே ஏற்றுக் கொண்டனர். திருமணத்திற்கு பின்னிட்டு மனுதாரும் எதிர்மனுதாரும் அவிநாசி வட்டம் தெக்கலூர் கிராமத்தில் உள்ள மனுதாரரின் வீட்டில் வசித்து வந்தனர். திருமணத்திற்கு பின்னிட்டு ஒரு மாத காலம் மனுதாரரும் எதிர்மனுதாரரும் சந்தோஷமாக வாழ்ந்து வந்தனர். பின்னிட்டு மேற்படி மருதாச்சலம், எதிர்மனுதாரரின் அக்கா மற்றும் மேற்படி கிருஸ்துவ பாதிரியார் அடிக்கடி மனுதாரரின் வீட்டிற்கு வந்து செல்வதுமாக இருந்தார்கள். அவ்வாறு வரும் போதெல்லாம் மேற்படி கிருஸ்துவ பாதிரியார் மனுதாரரின் குடும்பத்தை அழைத்து ஜபம் செய்வதை வழக்கமாக கொண்டிருந்தார். பின்னிட்டு மனுதாரரின் குடும்பத்தாரையும் கிருஸ்துவ மதம் மாற மேற்படி கிருஸ்துவ பாஸ்டரும் மற்றும் மருதாச்சலமும் எதிர்மனுதாரர் மூலம் வற்புறுத்த தொடங்கினர். அதற்கு மனுதாரர் மறுத்ததால், மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் சண்டை சச்சரவுகள் வந்ததால் மனுதாரர் அவரை அழைத்துக்கொண்டு தனிக்குடித்தனம் சென்றார். தனிக்குடித்தனம் சென்ற பிறகு எதிர்மனுதாரரின் குணநலன்களில் மாற்றம் ஏற்படவில்லை. மனுதாரருடன் தேவையின்றி அடிக்கடி சண்டையிட்டு கைகளில் கிடைத்த பொருட்களை தூக்கி எறிவதும் தன்னைத்தானே அடித்துக்கொண்டும் தலையை சுவற்றில் முட்டிக்கொண்டும் ஒரு மனநலம் பாதிக்கப்பட்டவர் போல் நடந்துகொள்ள ஆரம்பித்தார். தற்கொலை முயற்சி செய்வதையும் வாடிக்கையாக வைத்திருந்தார். குழந்தை இல்லை

என்ற காரணத்திற்காக எதிர்மனுதாரருக்கு மருத்துவ சிகிக்சை அளிக்கப்பட்டது. ஆறுமாத கால சிகிச்சைக்கு பின்னிட்டு எவ்வித முன்னேற்றமும் இல்லை என்பதால், எதிர்மனுதாரர் சிகிச்சைக்கு ஒத்துழைக்க மறுத்துவிட்டார்.

கடந்த 2021ம் வருடம், அக்டோபர் மாதத்தில் எதிர்மனுதாரர் திருப்பூர் மாவட்ட கண்காணிப்பாளர் அவர்களிடம் எதிர்மனுதாரரும் அவரது அக்கா விஜியும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் தங்களை கொடுமைப்படுத்துகிறார்கள் என்று மனுதாரர் மற்றும் அவரது குடும்பத்தார் மீது பொய் புகார் கொடுத்தார். அதன் பேரில் விசாரித்த காவல்துறையினர் மனுதாரரும், எதிர்மனுதாரரும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இல்லை என்பது தெரிய வந்ததால் இருவரையும் சேர்ந்து வாழுமாறு புத்திமதி சொல்லி அனுப்பி வைத்தார்கள். மனுதாரரின் பெற்றோரிடம் சென்று பணம் நகைகள் வேண்டுமென்றும், சொத்தை எதிர்மனுதாரரின் பெயருக்கு எழுதி வைக்குமாறு சண்டையிட்டு அவர்களை அடித்து துன்புறுத்துவதையும் வாடிக்கையாக வைத்திருந்தார். இந்நிலையில் கடந்த டிசம்பர் மாதம் 2022-ஆம் வருடத்தில் அவிநாசி அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் மனுதாரரும் அவரது பெற்றோரும் பணத்தையும், நகையையும் பிடுங்கி வைத்துவிட்டனர் என்று புகார் மனு கொடுத்தார். மேற்படி விசாரணையில் மனுதாரரும், எதிர்மனுதாரரும் சேர்ந்து வாழ வாய்ப்பில்லை என்று கூறி எதிர்மனுதாரரிடமிருந்து மனுதாரர் பெற்று தறி போட்டு கொடுத்த ரூ.4,50,000/-ஐ அவரிடம் திருப்பி கொடுத்துவிட்டார். மனுதாரரின் Activa வண்டியை காவல்நிலையத்தில் கொடுத்துவிடுவதாக கூறிய எதிர்மனுதாரர், பின்பு விவாகரத்து பெற்ற பிறகு தான் கொடுப்பேன் என்று கூறி சண்டையிட்டு வண்டியை எடுத்துச்சென்றுவிட்டார். மனுதாரர் கடந்த 2022-ம் வருடம், டிசம்பர் மாதத்தில் இருந்து அவரது பெற்றோருடன் வசித்து வருகிறார். இனிமேற்கொண்டும், மனுதாரர் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ வாய்ப்பில்லை என்பதால் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

**3) எதிருரையின் சுருக்கம் :**

மனுவில் கண்டுள்ள சங்கதிகள் யாவும் பொய். சட்டத்தின் முன் நிலைநிற்கத்தக்கதல்ல. எதிர்மனுதாரருக்கும், மனுதாரருக்கும் திருமணம் நடைபெற்றது ஒப்புக்கொள்ளப்படுகிறது. திருமணத்தின் போது மனுதாரர் எதிர்மனுதாரருக்கு 5 பவுன் தாலிக்கொடி அணிவித்தார் என்பதும், திருமணச் செலவுகளை சுமார் ரூ.6,00,000/- மனுதாரரின் வீட்டாரே ஏற்றுக் கொண்டனர் என்பதையும் மனுதாரரே நிரூபிக்க வேண்டும். குழந்தை இல்லாத காரணத்தினால் எதிர்மனுதாரரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக கூறுவது முற்றிலும் பொய்யான சங்தியாகும். எதிர்மனுதாரர் தனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை விற்று தறி போட்டு கொடுத்தார் என்பது உண்மை. மனுதாரர் தேவையின்றி எதிர்மனுதாரருடன் சண்டையிட்டு வந்தார். இந்த எதிர்மனுதாரருக்கு ஆதரவாக செலவுத்தொகையுடன் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமாய் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) <u>பிரச்சனை :</u>

மனுதாரரின் மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

5) மனுதாரர் தரப்பில், மனுதாரர் கிஷோர்குமார் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, ம.சா.1ன் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர் சித்ரா எ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, சான்றாவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

6) <u>பிரச்சனைக்கான தீர்வு :</u>

கடந்த 04.09.2017-ஆம் தேதியில் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே நடந்த திருமணத்தை இரத்து செய்து விவாகரத்து வழங்கி உத்திரவிடக்கோரி மனுதாரரால் இந்த மனு இந்து திருமணச்சட்டப்பிரிவு 13 (1) (i-a)-ன் கீழ் 31.07.2023-ஆம் தேதியில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர் தரப்பில் ம.சா.1 ஆக மனுதாரர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவரது சாட்சியத்தில், தனக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 04.09.2017-ஆம் தேதியன்று

இந்துகுல வழக்கப்படி சக்தி விநாயகர் திருக்கோயிலில் வைத்து திருமணம் நடைபெற்று, தனது வீட்டில் வசித்து வந்ததாகவும், திருமணத்திற்கு பின்னிட்டு ஒரு மாத காலம் மனுதாரரும் எதிர்மனுதாரரும் சந்தோஷமாக வாழ்ந்து வந்ததாகவும், தன்னையும், தனது குடும்பத்தாரையும் கிருஸ்துவ மதத்திற்கு மாற மேற்படி கிருஸ்துவ பாஸ்டரும் மற்றும் மருதாச்சலம் என்பவரும் எதிர்மனுதாரர் மூலம் வற்புறுத்த தொடங்கியதாகவும், அதனால் தனக்கும், எதிர்மனுதாரருக்கும் சண்டை சச்சரவுகள் வந்ததால் எதிர்மனுதாரரை அழைத்துக்கொண்டு தனிக்குடித்தனம் சென்ற பிறகும் கூட எதிர்மனுதாரரின் குணநலன்களில் மாற்றம் ஏற்படவில்லை என்றும், தன்னுடன் தேவையின்றி அடிக்கடி சண்டையிட்டு கைகளில் கிடைத்த பொருட்களை தூக்கி எறிவதும் தன்னைத்தானே அடித்துக்கொண்டும் தலையை சுவற்றில் முட்டிக்கொண்டும் ஒரு மனநலம் பாதிக்கப்பட்டவர் போல் நடந்துக்கொண்டு, தற்கொலை முயற்சி செய்வதையும் வாடிக்கையாக வைத்திருந்தாகவும், குழந்தை இல்லை என்ற காரணத்திற்காக எதிர்மனுதாரருக்கு மருத்துவ சிகிக்சை அளிக்கப்பட்டது. ஆறுமாத கால சிகிச்சைக்கு பின்னிட்டு எவ்வித முன்னேற்றமும் இல்லை என்பதால், எதிர்மனுதாரர் சிகிச்சைக்கு ஒத்துழைக்க மறுத்துவிட்டதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

மேலும், அவரது சாட்சியத்தில், 2021 மற்றும் 2022ம் வருடங்களில் தன் மீதும் தன் குடும்பத்தார் மீதும் பொய்யான புகார் கொடுத்ததாகவும், தனது பெற்றோரிடம் சென்று பணம் நகைகள் வேண்டுமென்றும், சொத்தை எதிர்மனுதாரரின் பெயருக்கு எழுதி வைக்குமாறு சண்டையிட்டு அவர்களை அடித்து துன்புறுத்துவதையும் வாடிக்கையாக வைத்திருந்ததாகவும், மேற்படி காவல்நிலையத்தார் விசாரணையில் தானும் எதிர்மனுதாரரும் சேர்ந்து வாழ வாய்ப்பில்லை என்று கூறி எதிர்மனுதாரரிடமிருந்து பெற்று தறி போட்டு கொடுத்த ரூ.4,50,000/-ஐ அவரிடம் திருப்பி கொடுத்துவிட்டதாகவும், தனது Activa வண்டியை காவல்நிலையத்தில் கொடுத்துவிடுவதாக கூறிய எதிர்மனுதாரர், பின்பு விவாகரத்து பெற்ற பிறகு தான் கொடுப்பேன் என்று கூறி சண்டையிட்டு வண்டியை எடுத்துச்சென்றுவிட்டதாகவும்,

கடந்த 2022–ம் வருடம், டிசம்பர் மாதத்தில் இருந்து எதிர்மனுதாரரை பிரிந்து வாழ்ந்து வருவதாகவும், இனிமேற்கொண்டும், எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ வாய்ப்பில்லை என்பதால் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியமளித்துள்ளார்.

7) எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையில் உபயதாரர்களின் திருமணம் ஒப்புக்கொள்ளப்பட்டு, மனுவின் மற்ற சங்கதிகள் மறுக்கப்பட்டுள்ளன. மேலும், மனுதாரரின் மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8) மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 2 04.09.2017–ஆம் தேதியன்று இந்துகுல வழக்கப்படி சக்தி விநாயகர் திருக்கோயிலில் வைத்து திருமணம் நடைபெற்றது என்பது குறித்து ம.சா.ஆ.3 திருமண அழைப்பிதழ், ம.சா.ஆ.5 திருமண புகைப்படம் மூலம் நிரூபணம் ஆகியுள்ளது. மேலும் மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 ஆக மனுதாரரின் குடும்ப அட்டை மற்றும் ம.சா.ஆ.2 ஆக மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை, ம.சா.ஆ.4 ஆக எதிர்மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை ஆகியவை குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் ஒரு இந்து மனைவிக்குரிய கடமைகள் எதையும் செய்யவில்லை என்றும், மனுதாரரின் பெயரில் உள்ள சொத்துக்களை எதிர்மனுதாரரின் பெயருக்கு எழுதி வைக்க சொல்லி சண்டையிட்டு வந்ததாகவும், மனுதாரரையும், அவரது பெற்றோரையும் தகாத வார்த்தைகளால் பேசி சண்டையிட்டு, அக்கம் பக்கத்தினர் முன்னிலையில் கேவலமாக நடந்துகொண்டதாகவும், எதிர்மனுதாரர் மனுதாரருடன் சண்டையிட்டுக்கொண்டு அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிடுவதை வாடிக்கையாக வைத்திருந்ததாகவும், மனுதாரர் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ பல முயற்சிகள் எடுத்தும், அனைத்தும் பலனற்று போய்விட்டது என்றும், மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டின் காரணமாக 2022, டிசம்பர் மாதம் முதல் இருவரும் பிரிந்து வாழ்ந்து வருவதாகவும் மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

9) எதிர்மனுதாரர் அவரது எதிருரையில் மனுவின் சங்கதிகளை மறுத்து, எதிருரை தாக்கல் செய்யப்பட்டிருந்தபோதிலும், எ.சா.1 அவரது குறுக்கு விசாரணை

சாட்சியத்தில், "நானாக மனுதாரரை பிரிந்துவிட்டேன் என்றால், மனுதாரரின் கருத்தில் எனக்கு உடன்பாடில்லை. அதால் அவருடன் வாழ பிடிக்காமல் விலகிவிட்டேன். தனக்கு குழந்தைகள் இல்லை. என்னால் மனுதாரருடன் சேர்ந்து வாழ முடியாது. எனக்கு மனுதாரரிடமிருந்து வரவேண்டிய பொருளோ, பணமோ, நகையோ எதுவும் இல்லை என்றால் சரிதான். நான் மனுதாரரிடம் வாழ்க்கை பொருளுதவி முழுவதும் பெற்றுக்கொண்டுவிட்டேன் என்றால் சரிதான்" என்று சாட்சியமளித்துள்ளார்.

எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவர் தன்னுடைய குறுக்கு விசாரணை சாட்சியத்தில், 'எதிர்மனுதாரரிடமிருந்து தனக்கு வரவேண்டிய பொருளோ, நகையோ எதுவும் இல்லை என்றால் சரிதான்' என்று சாட்சியமளித்துள்ளார். மேற்கண்ட சங்கதிகளை பரிசீலனை செய்தவகையில், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் இத்திருமணத்தினால் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர் என்பதையும் இந்நீதிமன்றதினால் அறிய முடிகிறது.

**10)** ம.சா.1 மற்றும் எ.சா.1 அளித்த சாட்சியத்தில் இருந்து தரப்பினர்கள் இருவரும் பிரிந்து வாழ்ந்து வருவதாக கூறுகின்ற நிலையில் இருந்தும், எதிர்மனுதாரரும் இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகி மனுதாரருக்கு விவாகரத்து கொடுக்க ஆட்சேபணை இல்லை என்று சாட்சியமளித்துள்ள சூழ்நிலையிலும், மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவில்,** மனுதாரரின் மனு அனுமதிக்கப்பட்டு, 04.09.2017–ஆம் தேதி மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து வழங்கி இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. செலவுத்தொகை ஏதுமில்லை.

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2024–ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 10–ஆம் நாள் என்னால் கையெழுத்திடப்பட்டு

இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

K SURESH KUMAR Digitally signed by K SURESH KUMAR Date: 2024.04.10 17:57:13 +0530

சார்பு நீதிபதி,
அவிநாசி.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் :</u>

ம.சா.1 – கிஷோர்குமார்

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | -- | மனுதாரரின் குடும்ப அட்டை – நகல் (அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது) |
| ம.சா.ஆ.2 | -- | மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை – நகல் (அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது) |
| ம.சா.ஆ.3 | | திருமண அழைப்பிதழ் – அசல் |
| ம.சா.ஆ.4 | -- | எதிர்மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை – நகல் (அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது) |
| ம.சா.ஆ.5 | -- | திருமண புகைப்படம் – அசல் |

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் :**

எ.சா.1 – சித்ரா

**எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் : இல்லை**

K SURESH KUMAR Digitally signed by K SURESH KUMAR Date: 2024.04.10 17:57:20 +0530

சார்பு நீதிபதி,
அவிநாசி.